


# சக்கர வியூகம்




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 203 16.1.2026 FRIDAY THAI : 2 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 203 16.1.2026 வெள்ளிக்கிழமை தை : 2 விலை : ரூ.5/-

## சென்னையில் காவல்துறை சார்பில்

# “சமத்துவ பொங்கல்”





## அவனியாபுரம் ஜல்லிக்கட்டு கோலாகலம்: வாடிவாசலில் சீறிப்பாயும் காளைகளை அடக்கும் காளையர்கள்!

மதுரை: ஜன.16-

தைத்திருநாளை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் ‘அவனியாபுரம் ஜல்லிக்கட்டு’ (ஜன.15) காலை 7 மணிக்கு கோலாகலமாக தொடங்கியது. சுமார் 1000 காளைகளும், 600 மாடுபிடி வீரர்களும் இதில் களம் கண்டுள்ளனர்.

ஜல்லிக்கட்டு போட்டி தொடங்குவதற்கு முன்னதாக, அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சியர் பிரவீன், மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயா, காவல் ஆணையர் லோகநாதன், ராஜன் செல்லப்பா எம்எல்ஏ முன்னிலையில் மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றனர். இதைத்தொடர்ந்து போட்டியை அமைச்சர் பி.மூர்த்தி, ஆட்சியர் பிரவீன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அவனியாபுரத்தில் உள்ள பல்வேறு கோயில்களின் காளைகள் முதலாவதாக அவிழ்த்து விடப்பட்டன. தொடர்ந்து மற்ற காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன.

ஒவ்வொரு சுற்றிலும் 100 காளை அவிழ்க்க இலக்கு நிர்ணயத்து மொத்தம் 12 சுற்றுகளாக அவனியாபுரம் ஜல்லிக்கட்டு திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் 5 சுற்று முடிவில் 500 காளைகள் அவிழ்க்கபட்டன. வாடிவாசலில் துள்ளி பாய்ந்த காளைகளின் திமில் பிடித்து அடக்கிய வீரர்களுக்கு தங்க காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன. பிடிபடாத காளைகளின் உரிமையாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இம்முறை மாடுபிடி வீரர்கள் ஒவ்வொரு சுற்றிலும் எத்தனை காளைகள் அடக்கினர் என்ற விவரம் டிஜிட்டல் திரை மூலம் ஒளிபரப்பப்படுவது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியை மதுரை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பார்க்கின்றனர். வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், குஜராத் உள்ளிட்ட வெளிமாநிலங்களை சேர்ந்தவர்களும் ஆர்வமுடன் கண்டுகளிக்கின்றனர்.

ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் ராஜசேகர் உள்பட முக்கிய பிரமுகர்களின் காளைகளும் இந்த போட்டியில் பங்கேற்றுள்ளன.

தயார் நிலையில் மருத்துவக் குழுவினர்: ஜல்லிக்கட்டு நடைபெறும் அவனியாபுரத்தில் 108 ஆம்புலன்ஸ்கள் 12, பைக் ஆம்புலன்ஸ்கள் 2, மருத்துவ பணியாளர்கள் 40 பேர் என மருத்துவ குழுவினர் தயார் நிலையில் உள்ளனர்.

களத்தில் வீரர்களுக்கு காயம் ஏற்படும் பட்சத்தில், அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, அருகில் உள்ள அரசு சிறப்பு முதலுதவி மையத்தில் அனுமதிக்கப்படுவார்கள். மேல் சிகிச்சை தேவைப்படும்பட்சத்தில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவக் கல்லூரிக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

காயமடையும் காளை மாடுகளை உடனடியாக மருத்துவ சிகிச்சைக்கு கொண்டு செல்லும் வகையில் கால்நடை ஆம்புலன்ஸ்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.




## மாநகர காவல் ஆணையாளர் அருண் பங்கேற்பு

சென்னை: ஜன.16-

மாநகர காவல்துறை சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் காவல் ஆணையாளர் அருண் கலந்து கொண்டு காவலர்கள் மற்றும் காவலர் குடும்பத்தினருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "சென்னை பெருநகர காவல்துறை சார்பாக, சென்னையில் பல்வேறு இடங்களில் சமத்துவ பொங்கல் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண், இன்று (15.01.2026) காலை, புனித தோமையர் மலை அருகே உள்ள ஆயுதப்படை வளாகத்தில், சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை, மத்திய குற்றப்பிரிவு மற்றும் தனிப்பிரிவுகள் சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, விழாவினை துவக்கி வைத்து, பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்து சிறப்புரையாற்றினார்.



மேலும், பொங்கல் விழாவையொட்டி, காவல் குடும்பத்தினர் வரைந்திருந்த கோலப்போட்டிக்கான கோலங்களை பார்வையிட்டு, கிராமிய பண்பாட்டினை பறைசாற்றும் விதமாக அங்கு அமைக்கப்பட்டிருந்த வயல்வெளி, நாற்று நடுதல், நெற்களஞ்சியம் உள்ளிட்ட கிராம கலைகளை பார்வையிட்டும், காவல் ஆளிநர்கள் மற்றும் காவல் குடும்பத்தினருக்கான கயிறு இழுத்தல், உறியடித்தல், இசை நாற்காலி உள்ளிட்ட விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார். மேலும், காவல் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் பரத நாட்டியம், கிராமிய, பொங்கல் நடனங்கள் மற்றும் சிலம்பாட்டம், மல்லர் கம்பம் ஆகிய சாகசங்களை காவல் குடும்பத்தினருடன் கண்டு ரசித்து பாராட்டினார்.

பின்னர் போட்டியில் வெற்றி பெற்ற காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் காவல் குடும்பத்தினருக்கு பரிசுகள் வழங்கி, சிறப்புரையாற்றி, அனைவருக்கும் மீண்டும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் காவல் ஆணையாளர் (தலைமையிடம்) ஜோஷி நிர்மல் குமார், இணை ஆணையாளர் (தலைமையிடம்) மகேஷ்வரன், துணை ஆணையாளர்கள் மருத்துவர் ஸ்ரீநாதா, (சைபர் கிரைம்), ராமமூர்த்தி (நுண்ணறிவுப் பிரிவு), சீனிவாசன் (புனித தோமையர்மலை), ஜெயகரன் (மோட்டார் வாகனப்பிரிவு), அன்வர் பாஷா (ஆயுதப்படைமிமி), காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் காவல் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.” என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் திருநாளை முன்னிட்டு அமைச்சருக்கு வாழ்த்து சொல்ல குவிந்த நிர்வாகிகள் தொண்டர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்க வாழ்த்து

சின்னாளபட்டி, ஜன.16

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் இல்லத்தில் அவருக்கு வாழ்த்து சொல்ல கட்சி நிர்வாகிகள், அலுவலர்கள் மற்றும் தொண்டர்கள் குவிந்த வண்ணம் இருந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு அரசு அலுவலர்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் சால்வை அணிவித்து பொங்கல் வாழ்த்து தெரிவித்து, அவரிடம் ஆசீர்வாதம் பெற்றனர். தனக்கு வாழ்த்து தெரிவிக்க வந்த கட்சி நிர்வாகிகளிடம் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தமிழர் திருநாளில் திராவிட பொங்கல் வைத்து மகிழ்ச்சியுடன் இருக்க வாழ்த்து தெரிவித்தார். அதன் பின்னர் கிராம ஊராட்சிகளில் இளைஞர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். ஹஜ் புனித பயணத்திற்கு நிதி உதவி வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு ஸ்ரீராமபுரம் இஸ்லாம் சமுதாயத்தைச் சேர்ந்த சபியம்மாள் மற்றும் அவரது குடும்பத்தினர் அமைச்சரின் கையைப் பிடித்து நன்றி தெரிவித்தது நெகிழச் செய்தது.



நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, துணைச் செயலாளர் ஆ.நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ச.ராஜப்;பா, மாநகர பொருளாளர் மீடியா சரவணன், திமுக நிர்வாகி ரெக்ஸ், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், முருகேசன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், பேரூர் கழக செயலாளர்கள் தங்கராஜ், நாகப்பன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் ரேகா அய்யப்பன், வனிதா தங்கராஜ், அகரம் நந்தகோபால் (எ) மணி, கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்மபட்டி மணி, சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த இதயதுல்லா, முஜிப், மாவட்ட பிரதிநிதி கன்னிவாடி பெருமாள். திண்டுக்கல் பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ஜான்பீட்டர், மற்றும் மலையடிவாரம் ஸ்ரீநிவாசபெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் மாரிமுத்து, அறங்காவலர் சீனிவாசன், மற்றும் குருக்கள், அய்யம்பாளையம் சுந்தர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தேர்தல் ஸ்பெஷல்: மதுரையில் கட்சி நிர்வாகிகள், பொது மக்களுக்கு பொங்கல் பரிசு மழை!

மதுரை, ஜன.16-

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் 2 மாதங்களே இருக்கும் சூழலில் மதுரையில் மக்களுக்கு, எம்எல்ஏக்கள், அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், பரிசு பொருட்கள் வழங்கி பிரச்சாரத்தை தொடங்கி விட்டனர்.

கடந்த தீபாவளி நாளில், கிளை, பகுதி, ஒன்றியச் செயலாளர்களுக்கு புத்தாடை, பட்டாசு, பரிசுப் பொருட்களை வழங்கினர். பொதுமக்களுக்கு தீபாவளி விழா நடத்தி, பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், எம்எல்ஏக்கள், தங்கள் தொகுதிக்குட்பட்ட கிளை செயலாளர்கள், பகுதி செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்களுக்கு பொங்கல் ரொக்கப் பரிசு வழங்கி வருகின்றனர். பலருக்கு கட்சித் தலைமையே குறிப்பிட்ட தொகையை பரிசாக வழங்கி உள்ளது.







இதுகுறித்து திமுக நிர்வாகிகள் கூறியதாவது: மாவட்ட, ஒன்றிய, கிளை பிரதிநிதிகளுக்கு ரூ.1,000, அணி நிர்வாகிகள், கிளைச் செயலா ளர்களுக்கு ரூ.2 ஆயிரம், வட்டச் செயலாளர்களுக்கு ரூ.5ஆயிரம், ஒன்றிய,பகுதிச் செயலாளர்களுக்கு ரூ.10 ஆயிரம் ரொக்கப்பணம் வழங்கப்பட்டு வருகிறது. சில தொகுதிகளில் நிர்வாகிகளுக்கு வேட்டி, சட்டை வாங்கி தரப்பட்டுள்ளது

மேலும். எம்எல்ஏக்கள், அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப பொதுமக்களுக்கு இனிப்புகள், ஹாட்பாக்ஸ், டிபன் கேரியர், பாத்திரங்களை வழங்கி வருகின்றனர். இத்துடன் முதல்வரின் பொங்கல் வாழ்த்துக் கடிதமும் அளிக்கப்படுகிறது. வாக்குச்சாவடி வாரியாக பெண்கள் 10 பேருக்கு சிறப்புப் பரிசும் அளிக்கப்படுகிறது என்று கூறினர்.

ஆளும்கட்சிக்கு தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பது போல், அதிமுக எம்எல் ஏக்கள், போட்டியிட விருப்ப மனு கொடுத்து 'சீட்'க் காக முயிற்சிக்கும் நிர்வாகிகள் திருமங்கலம், திருப்பரங் குன்றம்,மதுரை மேற்கு, மதுரை வடக்கு, மேலூர் உள்ளிட்ட சட்டப்பேரவைத் தொகுதிகளில் பொதுமக்களுக்கு குடம், டிபன் பாக்ஸ், சேலை, பாத்திரங்களை பொங்கல் பரிசுகளாக வழங்கி வருகின்றனர்.

# தொடர்ச்சியாக எல்லைக்குள் ஊடுருவ முயற்சி: பாகிஸ்தான் ட்ரோன்கள் மீது இந்திய ராணுவம் துப்பாக்கிச்சூடு

ஜம்மு, ஜன.16-
ஜம்முகாஷ்மீர் ரஜோரி மாவட்டத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு (எல் ஓசி) வழியாக நாட்டுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் ட்ரோன்கள் மீது இந்திய ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர். இதுகுறித்து ராணுவ அதிகாரிகள் கூறுகையில், ''ரஜோரி மாவட்டத்தின் மஞ்சகோட் செக்டாரில் பாகிஸ்தான் ட்ரோன்கள் வட்டமடித்தன. சிறிது நேரம் இந்திய எல்லைக்குள் பறந்த அந்த ட்ரோன்களை குறி வைத்து இந்திய ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதைத்தொடர்ந்து அந்த ட்ரோன்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்குள் தப்பிச் சென்றன'' என்றனர். இந்த சம்பவம்



குறித்து ராணுவத் தளபதி உபேந்திர திவேதி கூறுகையில், ''கடந்த மூன்று நாட்களாக ஜம்மு எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் ட்ரோன்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதுகுறித்து, பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கை தலைமை இயக்குநரிடம் (டிஜிஎம்ஓ) கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது'' என்றார். கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நவ்ஷேரா செக்டார் மற்றும் பூஞ்ச் மாவட்டத்தின் மன்கோட், சம்பா மாவட்டத்தின் ராம்கர் உள்ளிட்ட பகுதிகளில் ட்ரோன்களின் நடமாட்டம் கண்டறியப்பட்டது. முன்னதாக, வெள்ளிக்கிழமை இரவு சம்பா மாவட்டத்தின் பாலோரா கிராமத்தில் ட்ரோன் மூலம் வீசப்பட்ட இரண்டு பிஸ்டல்கள், மூன்று மேகசின்கள் மற்றும் ஒரு கையெறி குண்டு ஆகியவற்றை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். இதேபோன்று ரஜோரியின் சிங்குஸ் பகுதியில் உள்ள துங்கா காலா எல்லை வழியாக பாகிஸ்தான் ட்ரோன்கள் நுழைந்தன. உடனடியாக விழிப்புடன் செயல்பட்ட இந்திய வீரர்கள் அதனை விரட்டியடித்தனர். பாகிஸ்தான் இத்தகைய தொடர்ச்சியான அத்துமீறல்களை அடுத்து எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

# பழங்குடியின மக்களுடன் சமத்துவ பொங்கல் விழா: மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர், ஜன.16-
தொடுகாடு ஊராட்சியில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் மாவட்ட கலெக்டர் தலைமையில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின்படி பாரம்பரிய முறையில் சமத்துவ பொங்கல் விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த விழாவில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் கோலப்போட்டிகள், உரியடித்தல் உள்ளிட்ட கிராமிய விளையாட்டு



போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் பல்வேறு அரசு திட்டங்களில் வீடுகள் வழங்கப்பட்டுள்ள 40க்கும் மேற்பட்ட பழங்குடியின குடும்பங்கள் வசிக்கும் பகுதிகளில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், தொடுகாடு ஊராட்சியில் பல்வேறு பகுதிகளில் வசித்து வந்த 240 பழங்குடியினர்களுக்கு இலவச பட்டா வழங்கி தற்போது 110 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இவர்களுக்கு 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, வீடுகள் தோறும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியுடன் கூடிய வீட்டு குழாய் இணைப்பு, சாலை வசதி, விளையாட்டு மைதானம் ஆகிய அடிப்படை வசதிகள் சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் செய்து தரப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொடுகாடு ஊராட்சியில் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் சமத்துவ பொங்கல் விழா மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் தலைமையில் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. விழாவில் மாவட்ட கலெக்டர் உரியடித்து பொங்கல் விழாவை சிறப்பித்தார். இதில் அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், விவசாயிகள் மற்றும் கிராம பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு போட்டிகளுடன் சமத்துவ பொங்கல் வெகுவிமரிசையாக கொண்டாடினர். இந்த விழாவில் ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் தணிகாசலம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கே.எஸ்.யுவராஜ், உதவி இயக்குநர் (பயிற்சி) மோகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சௌந்தரி, நடராஜ், தனியார் கார் நிறுவன துணை பொது மேலாளர் ஷிம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தனியார் மருத்துவமனைகளில் இலவச தடுப்பூசி திட்டம்: 100% இலக்கை எட்ட சுகாதாரத் துறை நடவடிக்கை

சென்னை, ஜன.16-
தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு இலவச தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்த சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்தில் தேசிய தடுப்பூசி அட்டவணையின் கீழ் மொத்தம் 11 வகையான தடுப்பூசிகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. அதன்படி, காசநோய், கல்லீரல் தொற்று மற்றும் புற்றுநோய், இளம்பிள்ளை வாதம், கக்குவான் இருமல்,ரண ஜன்னி, தொண்டை அடைப்பான், இன்ஃப்ளுயன்சா தொற்று,நிமோனியா, வயிற்றுப்போக்கு, தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய், ஜப்பானிய மூளைக்காய்ச்சல், வைட்டமின் ஏ குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகளுக்காக தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 9.40 லட்சம் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார



நிலையங்கள் உட்பட 11 ஆயிரம் இடங்களில் அந்த தடுப்பூசிகள் அளிக்கப்படுகின்றன. முதல் தவணை தடுப்பூசிக்கு பிறகு அடுத்த தவணையை சில குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் பெற்றோர் செலுத்துவதில்லை. இதனால் 100 சதவீத தடுப்பூசி இலக்கு அனைத்து இடங்களிலும் எட்டப்படுவதில்லை.


எந்த சுகாதார மாவட்டம் தடுப்பூசி செயல்பாட்டில் பின்தங்கியுள்ளது என்பதை கண்டறிந்து, அதனை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத் துறை மேற்கொண்டு வருகிறது. அதேநேரம் தனியார் மருத்துவமனைகளிலும் இலவச தடுப்பூசி செயல் திட்டத்தை மேம்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறுகையில், “தமிழகத்தில் தேசிய தடுப்பூசி அட்டவணையின் கீழ் வழங்கப்படும் அனைத்து தடுப்பூசிகளும் போதிய எண்ணிக்கையில் பாதுகாப்பாக இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தடுப்பூசி தவணைகள் தவறவிடப்படாமல் இருப்பதை உறுதி செய்ய தனியார் மருத்துவமனைகளிலும் இலவசமாக 11 தடுப்பூசிகளை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இணைந்து செயல்பட விரும்பும் தனியார் மருத்துவமனைகள், அதுகுறித்து பொது சுகாதாரத் துறைக்கு விண்ணப்பிக்கலாம். சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு சுகாதாரத் துறை அதிகாரிகள் சென்று கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்வார்கள். அதில் திருப்தி ஏற்படும்பட்சத்தில் இலவச தடுப்பூசி திட்டத்தை சம்பந்தப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் செயல்படுத்த அனுமதி வழங்கப்படும். தடுப்பூசி மருந்துகளும் அரசு சார்பில் வழங்கப்படும். தடுப்பூசிகள் முறையாக பயன்படுத்தப்பட்டதற்கான ஆவணங்களை அரசுக்கு தனியார் மருத்துவமனைகள் அளிக்க வேண்டும். அதன் அடிப்படையில் தொடர்ந்து தடுப்பூசிகள் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்” என்றனர்.

# லண்டனில் கடத்தப்பட்ட பெண்ணை பாகிஸ்தான் கும்பலிடம் இருந்து போராடி மீட்ட சீக்கியர்கள்

லண்டன், ஜன.16-
இங்கிலாந்தின் மேற்கு லண்டனில் உள்ளது ஹவுன்ஸ்லோ பகுதி. இங்கு 20 பள்ளிகள் உள்ளன. பாகிஸ்தானைச் சேர்ந்த சிலர் இந்தப் பள்ளிகளில் பயிலும் டீன் ஏஜ் பெண்களை குறிவைத்து காதல் வலையில் சிக்க வைக்கின்றனர். பின்னர் இவர்களை தங்கள் குழுவினரின் பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்துகின்றனர். இந்த இளம் பெண்களை ஐஎஸ் தீவிரவாத இயக்கத்தில் சேர்க்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. இந்தக் கும்பல் இங்கிலாந்து பெண்களை மட்டும் அல்லாமல் லண்டனில் உள்ள சீக்கிய பெண்களையும் தங்கள் வலையில் சிக்க வைக்க முயற்சிக்கின்றனர். லண்டன் ஹவுன்ஸ்லோ பகுதியைச் சேர்ந்த சீக்கிய டீன் ஏஜ் பெண்ணுக்கு, சுமார் 35 வயதுக்கு



மேற்பட்ட நபர் ஒருவர் வலை விரித்துள்ளார். அந்தப் பெண்ணுக்கு 13 வயது இருக்கும்போதே அவர் பழகியுள்ளார். அந்தப் பெண்ணுக்கு 16 வயது ஆனவுடன் அவரை வீட்டை விட்டு வெளியேறும்படி அவரை காதலித்த நபர் தூண்டியுள்ளார். இவரிடமிருந்து சீக்கிய இளம் பெண்ணை மீட்கும் முயற்சியில் ‘ஏகே மீடியா 47’ என்ற சீக்கிய குழுவைச் சேர்ந்த சுமார் 200 பேர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து குற்றவாளியை போலீஸார் கைது செய்தனர்.

இதுபோன்ற சம்பவங்கள் லண்டனில் பல நடந்து வருகின்றன. ஆனால், இனவாத குற்றச்சாட்டை ஏற்படுத்தும் என்பதால், இச்சம்பவங்களை போலீஸாரும், உள்ளூர் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வந்தனர். இதுபோன்ற சம்பவங்களை இங்கிலாந்து அரசு தடுக்க தவறி விட்டதாக எக்ஸ் நிறுவன தலைவர் எலான் மஸ்க்கும் கடந்தாண்டு குற்றம் சாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஈரான் வான்வெளி மூடல்: சர்வதேச விமானப் போக்குவரத்து பாதிப்பு

## ஏர் இந்தியா மற்றும் இண்டிகோ நிறுவனங்கள் எச்சரிக்கை

டெல்லி, ஜன.16-
ஈரானில் நிலவி வரும் அசாதாரணமான சூழல் காரணமாக அந்நாட்டின் வான்வெளி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியாவிலிருந்து இயக்கப்படும் ஏர் இந்தியா மற்றும் இண்டிகோ உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களின் சர்வதேச விமானச் சேவைகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இது தொடர்பாக ஏர் இந்தியா நிறுவனம் வெளியிட்டுள்ள பயண ஆலோசனையில், பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஈரான் வான்வெளியைத் தவிர்த்து மாற்றுப் பாதைகளில் விமானங்கள் இயக்கப்படுவதாகவும், மாற்றுப் பாதை வசதி இல்லாத இடங்களில் சில சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதேபோல் இண்டிகோ நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில், ஈரான் வான்பரப்பைத் தவிர்த்து நீண்ட தூர மாற்றுப் பாதைகளில் விமானங்கள் இயக்கப்படுவதால் பயண நேரம் கணிசமாக அதிகரிக்கும் என்றும், இதனால் விமானங்கள் தாமதமாக இலக்கைச் சென்றடைய வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. எனவே, பயணிகள் விமான நிலையத்திற்குப் புறப்படுவதற்கு முன்னதாகவே தங்களது விமானத்தின் தற்போதைய நிலையை இணையதளம் வாயிலாகச் சரிபார்த்துக் கொள்ளுமாறு இரு நிறுவனங்களும் அறிவுறுத்தியுள்ளன.

விமானப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் FlightRadar24 தளத்தின் தகவல்படி, தற்போது ஈரானின் வான்பரப்பில் வணிக ரீதியான விமானங்கள் எதுவும் இயக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் நிலவும் அரசியல் பதற்றம் காரணமாகப் பல்வேறு சர்வதேச விமான நிறுவனங்களும் ஈரானைத் தவிர்த்து பாதுகாப்பான வான்வெளிகள் வழியாகச் சுற்றுப் பாதையில் செல்வதால், உலகளாவிய விமான அட்டவணைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் இணைப்பு விமானங்களைப் பிடிக்க வேண்டிய பயணிகள் கூடுதல் காத்திருப்பு நேரத்தையும், நீண்ட பயணத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தற்போதைய நிலவரத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகத் தெரிவித்துள்ள ஏர் இந்தியா, ஈரானில் சூழல் சீரடைந்து வான்வெளி மீண்டும் திறக்கப்பட்டவுடன் பழைய வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படும் என்று கூறியுள்ளது. அதுவரை நிலவும் தற்காலிக மாற்றங்களுக்குப் பயணிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என விமான நிறுவனங்கள் கேட்டுக் கொண்டுள்ளன.



# நாட்டின் பணவீக்கம் 0.83% அதிகரிப்பு

புதுடெல்லி, ஜன.16-
மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் கடந்த டிசம்பரில் 0.83 சதவீதமாக அதிகரித்துள்ளது. மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, கடந்த 2025ம் ஆண்டு நவம்பரில் 0.32% அளவுக்கு குறைந்து காணப்பட்ட பணவீக்கம், டிசம்பரில் 0.83% ஆக உயர்ந்துள்ளது. மொத்த விற்பனை விலை குறியீட்டு பட்டியலில் முக்கியப் பங்கு வகிக்கும் உற்பத்திப்பொருட்களின் பணவீக்கம்டிசம்பரில்1.82%ஆகப்பதிவாகியுள்ளது. உணவுப் பொருட்களின் விலை உயர்வு ‘பூஜ்ஜியம்’சதவீதம்என்ற அளவிலேயே உள்ளது.



# பழவேற்காடு லைட்ஹவுசை பொதுமக்கள் பார்வையிட அனுமதி: காவல் இணை ஆணையர் ஆய்வு

பொன்னேரி, ஜன.16-
பொன்னேரி அருகே, பழவேற்காட்டில் நேற்று பொங்கல் பண்டிகை முடிந்ததும் ஏராளமான சுற்றுலா பயணிகள் பழவேற்காடு கடற்கரைக்கு படையெடுத்து வருவர். அங்கு அவர்கள் கடலில் அல்லது ஏரியில் குளிக்க சென்றால், ஒரு உயிரிழப்புகூட ஏற்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு, திருப்பாலைவனம் காவல்துறை சார்பில், நேற்று முன்தினம் மாலை பழவேற்காட்டில் பொன்னேரி காவல் உதவி ஆணையர் சங்கர் தலைமையில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஆய்வாளர் காளிராஜ் வரவேற்றார். இதில் மீன்வளம், வருவாய், வனத்துறை, தமிழ்நாடு கடலோர காவல் படை, பழவேற்காடு சுற்றுவட்டார மீனவ கிராமங்களின் நிர்வாகிகள் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பின்னர், ஆவடி காவல் இணை ஆணையர் சிவகுமார் பழவேற்காடு பகுதிக்கு வந்து, அங்கு மீனவர் கிராம நிர்வாகிகளுடன் கலந்துரையாடி, அதிகளவில் சுற்றுலா பயணிகள் கூடும் கடற்கரை பகுதிக்கு சென்று ஆய்வு நடத்தினார். அதைத்தொடர்ந்து, அங்குள்ள தமிழகத்தின் 2வது மிக உயரமான லைட்ஹவுசை இன்று முதல் பார்வையாளர்கள் சென்று பார்ப்பதற்கு அனுமதி வழங்கினார். இதைத்தொடர்ந்து, லைட்ஹவுசின் உச்சியை பார்வையாளர்கள் சென்று பார்ப்பதற்கு புதிய லிப்ட் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இந்த லிப்ட் வசதி மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் சிவகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார்.

# லட்சக்கணக்கான பக்தர்கள் சரணகோஷம் முழங்க சபரிமலையில் மகரஜோதி தரிசனம் கோலாகலம்

திண்டுக்கல், ஜன.16-
சபரிமலையில் ஐயப்பனுக்கு திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்டு மகர விளக்கு வழிபாடு கோலாகலமாக நடைபெற்றது. பொன்னம்பலமேட்டில் திரண்டிருந்த திரளான பக்தர்கள் மகரஜோதியை வழிபட்டனர். சபரிமலை ஐயப்பன் கோயிலின் முக்கிய நிகழ்ச்சியாக மகரஜோதி தரிசனம் திகழ்கிறது. மகரஜோதியை தரிசிக்க தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும், மாலை அணிந்து, விரதமிருந்து வந்த ஐயப்ப பக்தர்கள், பொன்னம்பலமேட்டில் மகரஜோதியைக் காண நேற்று காலை முதலே திரண்டிருந்தனர். முன்னதாக, மகரஜோதியை முன்னிட்டு ஐயப்ப சுவாமிக்கு



அணிவிக்க பாரம்பரிய ஆபரணங்கள் பந்தளத்தில் இருந்து புறப்பட்டு நேற்று மாலை சந்நிதானத்தை வந்தடைந்தது. திரு ஆபரணப்பெட்டி ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டதால் காலை 10 மணி முதல் பக்தர்கள் நிலக்கல்லில் இருந்து பம்பைக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதேபோல, காலை 11 மணி முதல் பக்தர்கள் பம்பையில் இருந்து சந்நிதானம் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஊர்வலம் சென்ற பிறகே பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.சந்நிதானம் வந்த திரு ஆபரணங்களை தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு, மேல் சாந்தி பிரசாத் நம்பூதிரி உள்ளிட்டோர் வரவேற்றனர். தொடர்ந்து, 18ம் படி வழியே திரு ஆபரணப் பெட்டி கொண்டு செல்லப்பட்டு நேற்று மாலை ஐயப்பனுக்கு ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டன. மகரஜோதி வழிபாட்டுக்கு முன்னோடியாக நேற்று மாலை மகர சங்கிரம பூஜை நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பு அபிஷேகம், தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றன. பக்தர்கள் சரணகோஷம் முழங்க ஐயப்பனை வழிபட்டனர். தொடர்ந்து, பொன்னம்பலமேட்டில் ஜோதி தெரிந்ததும், சபரிமலையில் திரண்டிருந்த ஐயப்ப பக்தர்கள் சரணகோஷங்கள் முழங்க தரிசித்தனர். பொன்னம்பலமேட்டில் தெரிந்த மகரஜோதியை தரிசனம் செய்ய பக்தர்களுக்கு 14 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. மேலும், வண்டிப்பெரியாறு, புல்மேடு, பஞ்சாலிமேடு, சத்திரம், பருந்துப்பாறை, அய்யன்மலை, நீலிமலை உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் மகரஜோதியை தரிசனம் செய்தனர். மகரஜோதியை தரிசனம் செய்ய லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டதால் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மகரஜோதியை தரிசித்த பக்தர்கள், புல்மேட்டில் இருந்து சத்திரம், வல்லக்கடவு வழியாக சந்நிதானம் சென்றனர். இரவு 11 மணி வரை பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். சபரிமலை ஐயப்பன் கோயிலில் மகரவிளக்கு பூஜைக்காக கடந்த நவ. 30ம் தேதி நடை திறக்கப்பட்டு தொடர்ந்து வழிபாடுகள் நடத்தப்பட்டன. மண்டல, மகரவிளக்கு விழாக்களில் இதுவரை 52 லட்சம் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்துள்ளனர்.

# திருப்போரூர் அருகே சுற்றுலாப் பயணிகளுடன் கிராம மக்கள் பொங்கல் விழா



திருப்போரூர், ஜன.16- ஆண்டு தோறும் மாமல்லபுரம் சுற்றுலாத்துறை சார்பில் பொங்கல் தினத்தன்று தமிழர்கள் பொங்கல் விழாவை எவ்வாறு கொண்டாடுகிறார்கள் என்பதை விழா நடத்தி நேரில் காட்டுவது வழக்கம். இந்த ஆண்டு பொங்கல் விழா திருப்போரூரை அடுத்துள்ள நெல்லிக்குப்பம் கிராமத்தில் நேற்று நடந்தது. வெளிநாட்டு பயணிகள் 40 பேர் விழா நடந்த நெல்லிக்குப்பம் கிராமத்திற்கு பேருந்துகளில் அழைத்து செல்லப்பட்டனர். தமிழக கலாச்சாரப்படி கிராம எல்லையில் வெளிநாட்டினருக்கு மலர்மாலை அணிவித்து, நெற்றியில் திலகமிட்டு, மேளதாளம் முழங்க, சுற்றுலாத்துறை சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அங்குள்ள கோயில் வளாகத்தில் பொங்கல் விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு நெல்லிக்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் பார்த்தசாரதி தலைமை தாங்கினார். செங்கல்பட்டு மாவட்ட சுற்றுலா அலுவலர் சக்திவேல் வரவேற்றார். எஸ்.எஸ்.பாலாஜி எம்எல்ஏ, செங்கல்பட்டு சார் ஆட்சியர் மாலதி ஹெலன், திருப்போரூர் வட்டாட்சியர் சரவணன், ஒன்றிய ஆணையாளர்கள் அரிபாஸ்கர் ராவ், கலைச்செல்வன் ஆகியோர் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுடன் இணைந்து பொங்கல் விழாவைக் கொண்டாடினர். கரகம், காவடியாட்டம், பரதநாட்டியம், சிலம்பாட்டம் உள்ளிட்ட கிராமிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் வெளிநாட்டு பயணிகள் சிலர் கிராமியக் கலைஞர்களுடன் இணைந்து நாட்டுப்புற பாடல்களுக்கு ஏற்ப நடனமாடி மகிழ்ந்தனர். மேலும் அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டிகளில் வெளிநாட்டு பயணிகள் பயணம் செய்து கிராமத்தின் அழகை கண்டு ரசித்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வெளிநாட்டினருக்கு உறியடி, இசை நாற்காலி, வழுக்கு மரம் ஏறுதல், மண் பானை செய்தல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு சுற்றுலாத்துறை சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன. இதையடுத்து வெளிநாட்டு சுற்றுலா பணிகளுக்கு தலை வாழை போட்டு சைவ விருந்து உணவு அளிக்கப்பட்டது. இந்த பொங்கல் விழாவில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மன் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பங்கேற்றனர்.

# தெற்குலக நாடுகளின் நலன்களுக்காக இந்தியா வலுவாக வாதிடுகிறது" சிஎஸ்பிஓசி மாநாட்டில் பிரதமர் மோடி



புதுடெல்லி. ஜன.16- "உலகளவில் ஒவ்வொரு தளத்திலும் தெற்குலக நாடுகளின் நலன்களுக்காக இந்தியா வலுவாக வாதிட்டு வருகிறது" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் தலைமை அதிகாரிகளின் 28வது மாநாட்டில் (சிஷிநிஜிசி) இன்று உரையாற்றிய பிரதமர் மோடி, "உலகளவில் ஒவ்வொரு தளத்திலும் இந்தியா தெற்குலக நாடுகளின் நலன்களுக்காக வலுவாக வாதிடுகிறது. ஜி20 அமைப்புக்கு இந்தியா தலைமையேற்ற போது, தெற்குலக நாடுகளின் கவலைகளை அப்போது உலகளாவிய நிகழ்ச்சி நிரலில் இந்தியா பதிவு செய்தது. நாங்கள் செய்யும் எந்தவொரு கண்டுபிடிப்புகளும், ஒட்டுமொத்தமாக தெற்குலக மற்றும் காமன்வெல்த் நாடுகளுக்கு பயனளிப்பதை உறுதி செய்வதே இந்தியாவின் தொடர்ச்சியான முயற்சியாகும். தெற்குலக நாடுகளில் உள்ள நமது கூட்டாளி நாடுகளும் இந்தியாவில் உள்ளதைப் போன்ற அமைப்புகளை உருவாக்கக்கூடிய வகையில், நாங்கள் வெளிப்படையான மூல தொழில்நுட்ப தளங்களை உருவாக்கி வருகிறோம். பொது நலன் என்ற உணர்வால் உந்தப்பட்டு, நாங்கள் அனைவரையும் உள்ளடக்கிய வகையில் செயல்படுகிறோம், யாரும் பின்தங்கிவிடாமல் இருப்பதை உறுதி செய்கிறோம். இந்த அர்ப்பணிப்புதான் சமீபத்திய ஆண்டுகளில் சுமார் 25 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்க இந்தியாவிற்கு உதவியது. இந்தியாவில், ஜனநாயகம் உண்மையாகவே பலன்களை வழங்குகிறது. இந்தியாவில், ஜனநாயகம் என்பது கடைக்கோடி மக்களுக்கும் பலன்களை வழங்குகிறது. இந்தியாவின் 2024 பொதுத் தேர்தலில் சுமார் 980 மில்லியன் மக்கள் வாக்களிக்கப் பதிவு செய்திருந்தனர். 8,000க்கும் மேற்பட்ட வேட்பாளர்களும், 700க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளும் தேர்தலில் பங்கேற்றன. இந்த வாக்காளர் எண்ணிக்கை சில கண்டங்களின் மக்கள்தொகையை விடப் பெரியது. தற்போது இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும், டெல்லியின் முதல்வராகவும் பெண்கள் உள்ளனர். இந்தியாவின் ஜனநாயகம் ஆழமான வேர்களால் தாங்கப்படும் ஒரு பெரிய மரம் போன்றது. விவாதங்கள், உரையாடல்கள் மற்றும் கூட்டு முடிவெடுக்கும் நீண்ட பாரம்பரியம் இந்தியாவுக்கு உண்டு. இந்தியா ஜனநாயகத்தின் தாய் என்று அழைக்கப்படுகிறது. நமது புனித நூலான வேதங்கள் 5,000 ஆண்டுகளுக்கும் மேலான பழமையானவை. மக்கள் கூடிப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து, விவாதங்களுக்கும் உடன்பாட்டிற்கும் பிறகு முடிவுகள் எடுக்கப்பட்ட சபைகளைப் பற்றி அவை குறிப்பிடுகின்றன" என்றார். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் நடைபெறும் இந்த உயர்மட்ட மாநாட்டில், 42 காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த 61 சபாநாயகர்கள் மற்றும் தலைமை அதிகாரிகள் மற்றும் 4 பகுதி தன்னாட்சி பெற்ற நாடாளுமன்றங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

# ஈரானில் ரேசா பஹ்லவி ஆட்சி பொறுப்புக்கு வருவது நன்மை பயக்கும் டொனால்டு ட்ரம்ப்



வாஷிங்டன், ஜன.16- ஈரானில் ரேசா பஹ்லவியால் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு தேவையான ஆதரவை பெற முடியுமா என்பது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கேள்வி எழுப்பியுள்ளார். ஈரான் நாட்டில் மதத் தலைவர் அயத்துல்லா அலி காமேனிக்கு எதிராக கடந்த மாதம் மக்கள் போராட்டம் வெடித்தது. அயத்துல்லா அலி காமேனி மற்றும் அதிபர் மசூத் பெசேஸ்கியான் பதவி விலக வேண்டும் என மக்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இந்த போராட்டத்தை ஒடுக்க ராணுவ வீரர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் சுமார் 2,500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அந்த நாட்டில் நிலவும் அசாதாரண சூழல் காரணமாக ஈரான் வான்வெளி மூடப்பட்டுள்ளது. இதனால் அங்கு விமான போக்குவரத்து தடைபட்டுள்ளது. இந்நிலையில், ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்படலாம் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். "ரேசா பஹ்லவி நல்லவராக உள்ளார். இருந்தாலும் ஈரானில் ஆட்சி அமைப்பதற்கான ஆதரவு அவருக்கு எப்படி இருக்கும் என்பது எனக்கு தெரியவில்லை. அது அவருக்கு அங்கு கிடைக்கும் உள்நாட்டு ஆதரவை பொறுத்துதான் இருக்கும். அவர் ஆட்சி பொறுப்புக்கு வருவது நன்மை சேர்க்கும். ஈரானில் ஆட்சி கவிழுமா என்பது எனக்கு தெரியாது. ஆனால், அதற்கான வாய்ப்பு உள்ளது" என தனியார் ஊடக நிறுவனத்துடனான பேட்டியில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு ஆதரவாக அவர் பேசி வருகிறார்.

# மும்பை உட்பட மகாராஷ்டிராவின் 29 மாநகராட்சிகளுக்கு தேர்தல்: விறுவிறு வாக்குப்பதிவு



மும்பை, ஜன.16- மும்பை, புனே உட்பட மகாராஷ்டிரா முழுவதும் உள்ள 29 மாநகராட்சிகளுக்கான வாக்குப்பதிவு நேற்று (ஜனவரி 15) காலை தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் பணக்கார மாநகராட்சியான மும்பை மாநகராட்சியை கைப்பற்றுவதற்காக, பாஜக தலைமையிலான மகாயுதி கூட்டணிக்கும், மீண்டும் ஒன்றுசேர்ந்த உத்தவ் தாக்கரே ராஜ் தாக்கரே சகோதரர்கள் கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதால், மும்பை மீது அனைவரின் கவனமும் குவிந்துள்ளது. மகாராஷ்டிராவின் 29 மாநகராட்சிகளில் உள்ள 893 வார்டுகளில் இருக்கும் 2,869 இடங்களுக்கான வாக்குப்பதிவு, பலத்த பாதுகாப்புடன் இன்று காலை 7.30 மணிக்குத் தொடங்கியது. மாலை 5.30 மணிக்கு வாக்குப்பதிவு முடிவடையும். மொத்தம் 3.48 கோடி வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிக்கின்றனர். 15,931 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்த மாநகராட்சி தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை ஜனவரி 16 அன்று நடைபெறும். கடைசியாக 2017ல் நடந்த மும்பை மாநகராட்சி தேர்தலில் சிவசேனா கட்சி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து, பாஜகவின் ஆதரவுடன் ஆட்சியமைத்தது. ஏக்நாத் ஷிண்டேவின் பிரிவுக்குப் பிறகு நடைபெறும் முதல் மும்பை மாநகராட்சித் தேர்தல் இது. ஆண்டுக்கு ரூ.74,400 கோடிக்கும் அதிகமான பட்ஜெட்டைக் கொண்ட மும்பை மாநகராட்சியில், நான்கு ஆண்டுகள் தாமதத்திற்குப் பிறகு தேர்தல் நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் 227 இடங்களுக்கு 1,700 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தேர்தலைக் கண்காணிப்பதற்காக மும்பை முழுவதும் 25,000க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மகாராஷ்டிரா மாநகராட்சி தேர்தலில் வாக்களிக்கும் 3.48 கோடி வாக்காளர்களில், 1.81 கோடி பேர் ஆண்கள், 1.66 கோடி பேர் பெண்கள், மற்றும் 4,596 பேர் மூன்றாம் பாலினத்தவர் ஆவர். இந்த தேர்தலுக்கான 39,092 வாக்குச்சாவடிகளில், 3,196 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என அறிவிக்கப்பட்டுள்ளன. மகாராஷ்டிராவில் நடைபெறும் மாநகராட்சித் தேர்தல்கள் காரணமாக இந்தியப் பங்குச் சந்தைகள் இன்று (ஜனவரி 15) மூடப்பட்டுள்ளன. தேர்தல் நாளை முன்னிட்டு, தேசிய பங்குச் சந்தை (NSE) மற்றும் மும்பை பங்குச் சந்தை (BSE) உட்பட இரண்டு முக்கிய பங்குச் சந்தைகளின் வர்த்தகம் இன்று நிறுத்தப்பட்டது.



# இயற்கை தந்த வரங்களுக்கு நன்றி சொல்லும் விழா பொங்கல்" குடியரசு துணைத் தலைவர் வாழ்த்து

கோவை, ஜன.16- பொங்கல் பண்டிகை இயற்கை தந்த வரங்களுக்கு நன்றி சொல்லும் விழா என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார். திருப்பூர், கோவை மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க, குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் நேற்று கோவை வந்தார்.விமான நிலையத்தில் அவரை அமைச்சர் முத்துசாமி, ஆட்சியர் பவன் குமார் கிரியப்பனவர், மாநகர காவல் ஆணையர் கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். பின்னர், சி.பி.ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சூரியனை வழிபடும் நாளாக பொங்கல் அமைந்தாலும், இயற்கை தந்த வரங்களுக்கெல்லாம் நன்றி சொல்லுகின்ற தமிழ் விழாவாகவும் அமைந்துள்ளது. உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் பொங்கல் நல் வாழ்த்துகள். இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து, நேற்று இரவு திருப்பூரில் தங்கிய குடியரசு துணைத் தலைவர், திருப்பூரில் இன்று நடைபெறும் பொங்கல் விழாவில் கலந்து கொள்கிறார். பின்னர், கோவை சிட்ரா சாலையில் உள்ள கேஎம்சிஹெச் மருத்துவமனையில் புதிய கட்டிடத் திறப்பு விழாவில் அவர் பங்கேற்கிறார். தொடர்ந்து, கொடிசியா அரங்கில் நடைபெறும் ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனையின் 50வது ஆண்டு பொன்விழா நிகழ்வில் பங்கேற்கிறார்.பின்னர், இன்று இரவு 7 மணிக்கு கோவை விமான நிலையத்தில் இருந்து டெல்லி புறப்பட்டுச் செல்கிறார்.

# ஜனநாயகன் விவகாரம்: ஐகோர்ட்டை நாட தயாரிப்பு நிறுவனத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு



புதுடெல்லி, ஜன.16- விஜய் நடித்துள்ள 'ஜன நாயகன்' திரைப்படத்தை வெளியிட தணிக்கைச் சான்றிதழ் வழங்கக் கோரியும் சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்க கோரியும் திரைப்படத்தின் தயாரிப்பு நிறுவனம் சார்பில் அண்மையில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு இன்று விசாரணைக்கு வந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தை நாடுமாறு தயாரிப்பு நிறுவனத்திடம் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. தவெக தலைவரான நடிகர் விஜய் நடித்துள்ள படம் 'ஜனநாயகன்'. கேவிஎன் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்தை ஹெச்.வினோத் இயக்கியுள்ளார். ஜனவரி 9ம் தேதி உலகம் முழுவதும் பதிந்த டத்தை வெளியிட திட்டமிட்டிருந்தனர். இதற்கான தொடக்கக்கட்ட பணிகள் நடந்துவந்தன. டிக்கெட் முன்பதிவும் தொடங்கி நடந்து வந்தது. அந்த சூழலில் இப்படத்துக்கு தணிக்கை சான்று கிடைப்பதில் சிக்கல் நீடித்தது. இதையடுத்து தயாரிப்பு நிறுவனம் உயர் நீதிமன்றத்தை நாடியது. இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி பி.டி.ஆஷா, ஜனநாயகன் படத்தை மறுஆய்வு குழுவுக்கு பரிந்துரை செய்த தணிக்கை வாரிய தலைவரின் உத்தரவை ரத்து செய்தார். அதையடுத்து தணிக்கை வாரியத்தின் சார்பில் தனி நீதிபதி பி.டி.ஆஷா பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா தலைமையிலான அமர்வு, தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதித்தது. மேலும் இந்த மேல்முறையீட்டு வழக்கை ஜன. 20ம் தேதிக்கு தள்ளிவைத்து, பதில் மனு தாக்கல் செய்யுமாறு தயாரிப்பு நிறுவனத்துக்கு உத்தரவிட்டது. சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா தலைமையிலான அமர்வு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து படத் தயாரிப்பு நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தது. இந்த மனு இன்று (ஜன.15) விசாரணைக்கு வந்தது. உச்ச நீதிமன்றம் தெரிவித்தது என்ன? ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்று வழங்க கோரிய மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், மனுதாரர் தரப்பு மீண்டும் உயர் நீதிமன்றத்தை நாடலாம் என தெரிவித்தது. ஏற்கனவே சென்னை உயர் நீதிமன்றத்தில் தணிக்கை சான்று விவகாரத்தில் தயாரிப்பு நிறுவனம் 'அவசரம் காட்டுவதாக' விமர்சித்த உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்பே இது தொடர்பான வாதங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த வழக்கை முழுமையாக விசாரிக்கப்படும் வரை படத்தின் தணிக்கை சான்றிதழை நிறுத்தி வைக்குமாறு மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புளியங்குடி நகராட்சி சார்பில் பிரமாண்டமான சமத்துவ பொங்கல் கலெக்டர், எம்எல்ஏ சேர்மன், பங்கேற்பு



புளியங்குடி,ஜன, 16-: புளியங்குடி நகராட்சி சார்பில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்கும் வகையில் பிரமாண்டமான முறையில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது புளியங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவிற்கு மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் தலைமை தாங்கினார் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் விஜயலட்சுமி, முன்னிலை வகித்தார். நகராட்சி ஆணையாளர் நாகராஜ் அனைவரையும் வரவேற்றார்., சதன் திருமலைகுமார், எம்எல்ஏ, மாவட்ட கல்வி அலுவலர் ரேணுகா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நகர் மன்ற தலைவர் விஜயா சவுந்திரபாண்டியன், துணை தலைவர் அந்தோணிசாமி ஆகியோர் சிறப்புரை வழங்கினர் இதில் நகராட்சி சார்பில் 51 பானைகளில் நகராட்சி ஊழியர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், தூய்மை பணியாளர்கள் என அனைத்து தரப்பினரும் இணைந்து பொங்கல் வைத்தனர். விழாவில் கலந்து கொள்ளும் மாணவர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள், குடும்ப பெண்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் கோலப்போட்டி, இசை நாற்காலி, ஓட்டப்பந்தயம், பாட்டிலில் நீர் நிரப்புதல், பானை உடைத்தல், நொண்டி ஓட்டம், கயிறு இழுத்தல், மிதி வண்டி மெதுவாக செலுத்தல், சிலம்பு கம்பு சுற்றுதல், ஊசியில் நூல் கோர்த்தல், உட்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது போட்டியில் வெற்றி பெற்ற நபர்களுக்கு ப்ரிட்ஜ், கிரைண்டர், மிக்ஸி, அயனர் பாக்ஸ் கேஸ் அடுப்பு, எல்இடி டிவி, குக்கர், உட்பட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசுகளை மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், நகர் மன்ற தலைவர் விஜயா சவுந்திரபாண்டியன், துணை தலைவர் அந்தோணிசாமி, நகராட்சி ஆணையாளர் நாகராஜ், மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வழங்கினர். முன்னதாக விழாவிற்கு வருகை தந்த மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர் விஜயலட்சுமி ஆகியோர் நுழைவு வாயில் இருந்து விழா மேடை வரை மாட்டு வண்டியில் அமர வைத்து நகராட்சி ஆணையாளர் நாகராஜ் வண்டியை ஓட்டி ஊர்வலமாக ஜலில் கட்டு மாடுகளுடன் அழைத்து வந்தார்... இதற்காக பள்ளி மைதானம் கடந்த பத்து நாட்களாக நகராட்சி ஊழியர்கள் உழைப்பினால் சிறப்பான முறையில் சீரமைக்கப்பட்டிருந்தது. பள்ளி மைதானம் சமப்படுத்தப்பட்டு அனைத்து இடங்களிலும் சுத்தம் செய்யப்பட்டிருந்தது. விழாவில் நகர மேற்கு பகுதி செயலாளர் நாகூர் கனி, திமுக பொதுக்குழு உறுப்பினர் பத்திரம் சாகுல் ஹமீது, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, நகர துணை செயலாளர் கருப்பசாமி, பேராசிரியர் நீலமேகம், நிர்வாகிகள் அன்புராஜன், அமராவதி கல்வி குழுமம் நிறுவனத் தலைவர் பாலசுப்பிரமணியன், செய்யது சுலைமான், மைதீன், காதர்மைதீன், சிபிஐ கட்சியை சேர்ந்தவேலு, சீனிவாசன், மதிமுக ஜாகீர் உசேன், கவுன்சிலர்கள் பொன்னுத்துரைச்சி, சித்ரா, கவிதா, லட்சுமி, அருணா தேவி, முருகன், கார்த்திகா, வள்ளி,தங்கம், காந்திமதி அம்மாள், செந்தாமரை, பிவி. பாலசுப்பிரமணியன், சங்கரநாராயணன்,அரசு பள்ளி தலைமை ஆசிரியர் மாரியப்பன், சுகாதார ஆய்வாளர் முருகன், மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்கள், அனைத்து கட்சி நிர்வாகிகள், நகரின் முக்கிய பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் ரோட்டரி லயன்ஸ் கிளப் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மாணவர்கள், கலந்து கொண்டனர், ஏற்பாடுகளை நகராட்சி ஊழியர்கள் அலுவலர்கள் செய்து இருந்தனர் முடிவில் சேக் காதர் மைதீன் நன்றி தெரிவித்தார்

# கசவனம்பட்டி மௌன ஜோதி நிர்வாண சுவாமிகக்கு கரும்பு காப்பு அலங்காரம் கோவில் வளாகம் முழுவதும் கரும்பு பந்தல்

சின்னாளபட்டி, ஜன.16-

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கசவனம்பட்டியில் தங்கி அருள்வாக்கு கூறி வந்தவர் ஸ்ரீகசவன மௌனஜோதி நிர்வாண சுவாமிகள். திண்டுக்கல் மாவட்ட மக்களால் துருவ நட்சத்திரம், மகான்களுக்கெல்லாம் மகான் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீஜோதி மௌன நிர்வாண சாமி கோவிலில் பௌர்ணமி, அமாவாசை பிரதோசம் ஆகிய நாட்களில் சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் பூஜைகள் நடைபெறுவது உண்டு. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பால், தேன், தயிறு, சந்தனம், விபூதி, திரவியப்பொடி, இளநீர், உட்பட 16 வகை சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றது.



அதன் பின்னர் 1008 கரும்புகளைக் கொண்டு சுவாமிக்கு கரும்பு காப்பு அலங்காரம் செய்திருந்தனர். கோவில் முன் மண்டபத்தில் கரும்புகளைக் கொண்டு பந்தல் அமைத்திருந்தனர். அதில் ஆப்பிள், அன்னாட்சிபழம், திராட்சை, சாத்துக்குடி, கொய்யாபழங்களை கொண்டு தோரணம் அமைத்திருந்தனர். அதிகாலை முதல் கோவிலில் கூட்டம் அலைமோதியது. பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தவண்ணம் இருந்தனர். சுவாமி தரிசனம் செய்யவந்த பக்தர்களுக்கு கரும்பு பிரசாதமாக வழங்கப்பட்டது.

# அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு வழிபாடு ஒன்றிய செயலாளர் முருகேசன் அன்னதானத்தை துவக்கிவைத்தார்

சின்னாளபட்டி ஜன 16-

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆலமரத்துப்பட்டியில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் அன்னதானத்தை துவக்கிவைத்து சிறப்பு குத்துவிளக்கு பூஜையில் கலந்துகொண்டவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும்,



திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்;ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஜனவரி மாதம் முழுவதும் திமுகவினர் அன்னதானம், விளையாட்டு போட்டிகள், நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர். ஆலமரத்துப்பட்டி ஊராட்சியில் மாவட்ட சுற்றுச் சுழல் அணி துணை அமைப்பாளர் ஆர்.விக்னேஷ்வரன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் எம்.கே. அரவிந்தன், ஆலமரத்து ஊராட்சி முன்னாள் தலைவர் ஆறுமுகம் சார்பாக அங்குள்ள பிள்ளையார் கோவில், மாரியம்மன் கோவில், காளியம்மன் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் குத்துவிளக்கு பூஜைகள் நடைபெற்து. அதைத் தொடர்ந்து மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கோவிலில் வழிபாடு செய்தார். அதன் பின்பு குத்துவிளக்கு பூஜையில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுகள் வழங்கிய பின்பு அன்னதானத்தை துவக்கி வைத்தார். ஆலமரத்துப்பட்டி பொதுமக்கள் மற்றும் ஊர் முக்கிய பிரமுகர்கள் அன்னதானத்தில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் ராஜேந்திரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், கிளைச் செயலாளர்கள் காளாஸ்திரி, பிச்சமுத்து, பாண்டியன் உட்பட கிளை நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



# சமயநல்லூர் அருகே நகரி பகுதியில் அதிமுக சார்பில் பழனி பாதயாத்திரை குழுவினருக்கு அன்னதானம்

சமயநல்லூர்.ஜன.16.-

மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே உள்ள நகரி பகுதியில் அதிமுக எடப்பாடி கிச்சன் என்னும் தலைப்பில் பழனி பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானத்தினை சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவரும் திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.பி. உதயகுமார் வழங்கி தொடங்கி வைத்தார். தொடர்ந்து பேசிய அவர் கடந்த கால அதிமுக ஆட்சியில் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டமான அம்மா கிச்சன் ஏழை எளிய மக்களுக்கு பயனுள்ளதாக இருந்து வந்தது அதனை இந்த அரசு முடக்கிவிட்டது உழைக்கும்தொழிலாளர் வயிற்றில் அடித்து வருகிறது வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமையும் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலமைச்சராக அரியணை அமருவார் என்று தெரிவித்தார்.. இதில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, வெற்றிவேல், வக்கீல் திருப்பதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, தமிழரசன், மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் அரியூர் ராதாகிருஷ்ணன், ரவிச்சந்திரன், காளிதாஸ், திருமங்கலம் ராமகிருஷ்ணன்,மாவட்ட விவசாய அணி ஆர்.பி.குமார், கிளை கழகச் செயலாளர் பாண்டுரங்கன், மாவட்ட பிரதிநிதி முரளி, அம்மா பேரவை துணைச் செயலாளர் மனோகரன், தகவல் தொழில்நுட்ப அணி ஆனந்த், இளைஞரணி மணிமாறன், பாலன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாலமேடு ஜல்லிக்கட்டு மஞ்சமலை மடத்து கமிட்டி நிர்வாகிகள் சிறப்பு பேட்டி

பாலமேடு ஜன 16.-

மதுரை மாவட்டம் பாலமேட்டில் மஞ்சமலை மடத்து கமிட்டி சார்பாக, இந்த ஆண்டு நடைபெறும் ஜல்லிக்கட்டை தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் கலந்து கொண்டு தொடங்கி வைத்து பார்வையிட உள்ளார். இந்த நிலையில்,

மடத்து கமிட்டி தலைவர் மச்சவேல், செயலாளர் பிரபு, பொருளாளர் கார்த்தி, ஆகியோர் பத்திரிக்கையாளர் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசியது : நம்மளுடைய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி 16.01.26 காலை 8 மணி அளவில் வெகு சிறப்பாக நடைபெற இருக்கிறது. கார், பைக், பிரிட்ஜ், தங்கநாணயங்கள் பீரோ, சைக்கிள், வாஷிங் மெஷின், மறும் எண்ணற்ற விலை உயர்ந்த பரிசுவழங்க உள்ளோம். வருகின்ற மக்களுக்கு எந்த ஒரு சிரமம் இன்றி விழாவினை



கண்டு கழிப்பதற்கு கேலரி அமைத்துள்ளோம். குடிநீர் வசதி மற்றும் அனைத்து வசதிகளையும் பாலமேடு பேரூராட்சி நிர்வாகமும், மஞ்சமலை மடத்து கமிட்டி நிர்வாகமும் செய்துள்ளது. பாலமேடு ஜல்லிக்கட்டு கடந்த 80 ஆண்டுகளாக கிராம கமிட்டியால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அதற்கு அரசும் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.சென்றாண்டு 1100காளைகள் வருகை தந்தது. இந்தாண்டம் அதே காளைகள் வரும் என தெரிவித்தனர். உள்ளூர் காளைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். முதல்வர் மற்றும் துணை முதல்வர் வழங்கும் பரிசுகளும் வழங்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஜல்லிக்கட்டை நேரில் தொடங்கி வைத்து பார்வையிட உள்ளார். அதனை தொடர்ந்து பாலமெடு கிராமத்தினர் சார்பாக அவருக்கு உற்சாக வரவேற்பளித்து, மரியாதை செய்வோம்.

பாதுகாப்பு பணியை மாவட்ட காவல்துறை சார்பாக செய்யப்பட்டு வருகிறது எனதெரிவித்தனர். இதில் உறுப்பினர்கள் தேவராஜ், சரவணன், சேகர், குணசேகர், நிதீஷ்குமார்.மணி, கந்தசாமி, விஜிக்குமார், கலந்து கொண்டனர்.



# புளியங்குடி லட்சுமி நரசிங்க பெருமாள் திருக்கோவிலில் சுவாதி திருமஞ்சன பூஜை

புளியங்குடி, ஜனவரி.16:-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் உள்ள லக்ஷ்மி நரசிங்க பெருமாள் கோவிலில் மார்கழி மாத சுவாதி பூஜை சிறப்பாக நடைபெற்றது. மாதந்தோறும் சுவாதி நட்சத்திரம் அன்று லக்ஷ்மி நரசிங்க பெருமாளுக்கு திருமஞ்சன பூஜை செய்வது சிறப்பு வாய்ந்தது. இங்கு பெருமாள் லட்சுமி நரசிம்மராக அருள்பாலித்து வருகிறார். புளியங்குடி லட்சுமி நரசிங்க பெருமாள் திருக்கோவிலில் மார்கழி மாத சுவாதி திருமஞ்சன பூஜை முன்னிட்டு மாலை 4:15 மணிக்கு மங்கள இசையுடன் பூஜை தொடங்கியது. பின் 04:30 மணிக்கு கும்ப பூஜை நரசிம்ம ஹோமம், விஷ்ணு ஹோமம், சுதர்சன ஹோமம் நடைபெற்று 05:30 மணிக்கு திருமஞ்சன அபிஷேகமும் 06:30 மணிக்கு அலங்கார தீபாராதனை காண்பிக்கப்பட்டது. உற்சவமூர்த்திகள் திருக்கோவில் வலம் வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். திருக்கோவில் அர்ச்சகர் சந்தோஷ், திருமஞ்சன பூஜை கமிட்டி' உறுப்பினர்களும் மற்றும் கட்டளைதாரர்கள் செல்வம், 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் லட்சுமி, செய்து இருந்தனர்.



■ சென்னையிலிருந்து விமான மூலம் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வே. சரவணன், இஆப., அவர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.

# திருவள்ளுவர் தினம் குடியரசுதினம் முன்னிட்டு மதுபானக் கடைகள் அடைப்பு

மதுரை, ஜன.16-

மதுரை மாவட்டத்தில் 16.01.2026 தேதியன்று "திருவள்ளுவர் தினம்" 26.01.2026 தேதியன்று "குடியரசுதினம்" முன்னிட்டு இரண்டு நாட்கள் FLI/FL2/FL3/FL3A/FL3AA மற்றும் FL11 ஆகிய உரிமம் பெற்றுள்ள அனைத்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லரை விற்பனைக் கடைகள், மனமகிழ்மன்றத்துடன் கூடிய மதுபானக் கூடங்கள், தங்கும் விடுதியுடன் கூடிய மதுபானக் கூடங்கள், தமிழ்நாடு சுற்றுலாத்துறை விடுதிகளால் நடத்தப்படும் மதுபானக் கூடங்கள் மற்றும் அயல்நாட்டு மதுபான சில்லரை விற்பனை கடைகள் 16.01.2026 மற்றும் 26.01.2026 ஆகிய தினங்கள் மூடப்பட்டு இருக்கும். மேற்படி நாட்களில் மது விற்பனை தொடர்பான விதிமீறல்கள் ஏதும் நடைபெறாமல் கண்காணிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தினங்களில் மதுபான சில்லரை விற்பனை எதுவும் நடைபெறாது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

# 77வது குடியரசு தின விழாவின் தலைமை விருந்தினர்களாக பங்கேற்க உள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள்

புதுடெல்லி, ஜன.16-

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் அன்டோனியோ கோஸ்டா ஆகியோர் இந்த ஆண்டு நடைபெறும் குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்கின்றனர். குடியரசு தின விழாவுக்காக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் அழைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இந்த இரண்டு ஐரோப்பிய கவுன்சில் தலைவர்கள் ஜனவரி 25 முதல் ஜனவரி 27 வரை இந்தியாவுக்கு அரசு முறை பயணமாக வருகின்றனர். மேலும், அவர்கள் ஜனவரி 27 அன்று நடைபெறும் 16வது இந்தியஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டிற்கும் இணைத் தலைமை தாங்குவார்கள். இந்த வருகையின் போது, ஐரோப்பிய ஆணையத் தலைவர் லேயன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்



தலைவர் கோஸ்டா ஆகியோர் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை சந்திப்பார்கள் என்றும், பிரதமர் நரேந்திர மோடியுடன் தனிப்பட்ட மற்றும் தூதுக்குழு அளவிலான பேச்சுவார்த்தைகளை நடத்துவார்கள் என்றும் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியா ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்படும் இந்திய ஐரோப்பிய கவுன்சில் வர்த்தக மன்றத்திலும் அவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் 2004 முதல் இணைந்து பணியாற்றி வருகின்றன. மேலும் இரு இந்தியா ஐரோப்பிய யூனியனின் வர்த்தக ஒப்பந்தமும் இறுதி கட்டத்தில் உள்ளன. இந்திய வர்த்தகச் செயலாளர் ராஜேஷ் அகர்வால், தலைவர்களின் உச்சிமாநாட்டிற்கு முன்பே இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு இரு தரப்பினரும் மிக அருகில் இருப்பார்கள் என்று கூறியுள்ளார்.

# வாசுதேவநல்லூரில் 1008 பானை "நம்ம ஊரு மோடி பொங்கல்" விழா திமுக அரசின் மீது அண்ணாமலை கடும் குற்றச்சாட்டு

தென்காசி, ஜன.16-

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில், பாரதிய ஜனதா கட்சியின் தென்காசி மாவட்டத் தலைவர் ஆனந்தன் அய்யாசாமி அவர்களின் ஏற்பாட்டில் "நம்ம ஊரு மோடி பொங்கல்" 1008 பானை பெருவிழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் முன்னாள் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேலும், 3000க்கும் மேற்பட்ட பெண்கள் 1008 பானைகளில் பொங்கலிட்டு இந்த விழா, பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளுடன் உற்சாகமாக நடைபெற்றது. நீட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவி, அக்னிபாத்



பயிற்சியாளர்கள், விவசாயிகள், மருத்துவ அணிகள் உள்ளிட்டோருக்கு பாராட்டு மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன. விழாவில் உரையாற்றிய அண்ணாமலை, "தென்காசி மக்களின் நீண்டகால கோரிக்கையான செண்பகவல்லி அணை சீரமைப்பு உள்ளிட்ட எந்த வாக்குறுதியையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை. விவசாயிகளின் நம்பிக்கையை திமுக அரசு வஞ்சித்து வருகிறது" என கடுமையாக விமர்சித்தார். மேலும், "புளியங்குடி எலுமிச்சைக்கு புவிசார் குறியீடு (நிமி) வழங்கி விவசாயிகளின் உழைப்புக்கு அங்கீகாரம் வழங்கியது மத்திய பாஜக அரசே. ஆனால், திமுக அரசு அடிப்படை தேவைகளைக்கூட புறக்கணிக்கிறது" எனத் தெரிவித்தார். தென்காசி மாவட்டத்தில் கனிம வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டு கேரளாவிற்கு கடத்தப்படுவதாகவும், இதனைத் தடுக்க திமுக அரசு தோல்வியடைந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இதன் வெளிப்பாடாக, திமுக நிர்வாகி ஒருவர் கட்சி பதவியை ராஜினாமா செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார். வரவுள்ள சட்டமன்றத் தேர்தலில் தென்காசி மண்ணைச் சேர்ந்த, தேசியவாத சிந்தனை கொண்ட ஒருவரை சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார். தமிழ் பண் பாடு, அரசியல் விழிப்புணர்வு மற்றும் சமூக ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்த "நம்ம ஊரு மோடி பொங்கல்" விழா, பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000